# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 42/2023** **Date:29.04.2026.**

**(PW3)- அஜித்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

1. இந்த வழக்கு விபரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். எனது பாட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் இரண்டு பிள்ளைகள் ஆவர். எனது தாத்தா அவரது சொத்தை யாருக்கு எவ்வளவு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனது தாத்தா யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை, எனது அப்பாவின் அக்கா மற்றும் எனது அப்பா சரிபாதி பிரித்து கொண்டனர். எப்போது பிரித்துக்கொண்டார்கள் என்றால் தேதி நினைவில்லை. இறந்து போன எனது பாட்டி சொத்து பொறுத்து வில்லங்க சான்றிதழ் எப்போது பார்த்தார் என்றால் அது பற்றி தெரியாது. நான் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளனோ என்றால் அது பற்றி தெரியாது. நான் அவ்வாறு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்திருந்தால் எனது அப்பா பிரதிவாதி வங்கிக்கு அடமானம் வைத்த விபரம் தெரிந்திருக்கும் என்றால் அது பற்றி தெரியாது.

2. பிரதிவாதி வங்கி தபசில் சொத்தை சப்தி செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஜப்தி நடவடிக்கையை எதிர்த்து எனது பாட்டி மேல்முறையீடு செய்து மேற்படி மேல்முறையீட்டில் கடன் தொகையை கட்டும்படி எனது பாட்டியிடம் தெரிவித்தனர் என்றால் அது பற்றி தெரியாது. என்னை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்க IA.No. 5/2020 என்ற மனு தாக்கல் செய்திருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மனுவில் கடன் மீட்பு தீர்பாயத்தின் உத்தரவை நான் ஆவணமாக தாக்கல் செய்திருந்தேன் என்றால் அது பற்றி தெரியாது. பிரதிவாதி வங்கி ஜப்தி செய்த வீட்டை நான் பூட்டை உடைத்து அத்துமீறி நுழைந்ததற்கு என் மீது மாணவாள குறிச்சி காவல் நிலையத்தில புகார் கொடுக்கப்பட்டது என்றால் எனது அம்மா மற்றும் அப்பா மீது கொடுத்தனர் என் மீது கொடுக்கவில்லை.

3. அப்புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நானும் எனது அப்பா மற்றம் அம்மா ஜாமீன் எடுத்தோம் என்றால் சரியல்ல. எனது தாத்தாவை எனது அப்பா ஏமாற்றியதாக எனது பாட்டி ஏதேனும் புகார் கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்து பிரதிவாதி நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றாலும் எனவே அதை

பொறுத்து எனது பாட்டி எழுதி வைத்த உயில் செல்லாது என்றாலும் அதன் மூலம் எனக்கு எந்த உரிமையும் ஏற்பாடது என்றாலும் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**